**அயகம பிரதேச சபை - 2022**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அயகம பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் அயகம பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள் கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 107,300 தொகையான அட்டுறு செலவினம் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கான இறுதிக் கணக்குகளை ஒப்பீடு செய்யும் போது அந்த பெறுமதி கைவிடப்பட்டுள்ளமை. | இது திருத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கைத்தொழில்களுக்கான கடன் பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் ரூபா 18,826,749 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளை ஒப்பிடும் போது திருத்தப்படும் என்பது. | -மேற்படி- |
| (இ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 06 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் பயன்பாட்டு ஆவணங்களின் பிரகாரம் அந்த மீதிகள் ஆகியவற்றுக்கிடையே ரூபா 20,130,866 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | 2020 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்து காணப்படும் வேறுபாடுகள் என்பதால் பரிசோதித்தல் மிகவும் கடினமான பணி என்பது. | வேறுபாட்டுக்கான காரணங்கள் இனங்காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 311,678 கூட்டுத்தொகையான காலாவதியான பல்வேறு வைப்புத் தொகைகள் நிதிப்பிரமாணம் 571(2) இன் பிரகாரம் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்குகளின் மூலம் திருத்தப்படும் என்பது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 08 முக்கியமான விடயங்களுக்காக உப விதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | இதற்கான சட்ட உதவியை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டவாறு உள்ளது. | பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 4,455,454 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1,627,450 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 1,287,560 | 1,263,910 | 1,246,874 | 581,796 | 1,097,100 | 1,059,337 | 1,025,797 | 556,210 |
| வாடகை | 7,703,612 | 8,423,573 | 8,909,463 | 909,920 | 8,010,733 | 8,581,874 | 5,896,292 | 2,605,388 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 517,410 | 517,390 | 482,840 | 11,000 | 363,900 | 501,714 | 440,274 | 15,850 |
| ஏனைய வருமானங்கள் | 710,000 | 491,840 | 485,576 | 12,593 | 8,620,100 | 878,214 | 867,917 | 12,217 |
| | 10,218,582 | 10,696,713 | 11,124,753 | 1,515,309 | 18,091,833 | 11,021,139 | 8,230,280 | 3,189,665 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 வருடங்களை விட பழமையான ரூபா 176,101 தொகையான நிலுவை ஏக்கர் வரி மீதியொன்று 2022 திசெம்பர் 31 ஆந் திகதி நிலவியது. | எதிர்காலத்தில் நிலுவை வருமானம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நிலுவை வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அயகம பேரூந்து நிறுத்தத்தின் மேல் தளத்தின் 05 அறைகள் 2017 ஆம் ஆண்டு முதல் பொலிஸாரால் பயன்படுத்தப்பட்ட காரணத்தால் வருமானமீட்ட முடியாதிருந்தது. | நிலுவைப் பணத்தில் ரூபா 105,000 அறவிடப்பட்டுள்ளமை. | கட்டிடம் நோக்கத்திற்குரிய பணியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். |

### 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

-

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நீர் மானியங்களை பொருத்தாது, 507 பேருக்கு நீர் விநியோகம் வழங்கப்பட்டு மாதாந்த நிலையான வைப்புக் கட்டணமொன்று மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டுக்காக பட்டியலிடப்பட்ட நீர் கட்டண வருமானம் ரூபா 614,100 ஆன போதிலும், அந்த சேவையை வழங்குவதற்கு சம்பளம் உள்ளடங்களாக மேந்தலை செலவினங்களுக்காக மீளாய்வாண்டினுள் ரூபா 1,085,909 செலவிடப்பட்டிருந்தது. நீரினை வழங்குவதற்கு செலவிடப்படும் செலவினம் அல்லது தீர்ப்பனவு செய்வதற்கு, நீர் மானி பொருத்தி கட்டணங்களை அறவிடுவதற்கு 2022 திசெம்பர் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நலன்புரி நடவடிக்கைகளாக இந்த நீர் செயற்திட்டங்கள் நடாத்தப்படுவதால் நீர் மானிகளை பொருத்துவதன் மூலம் செலவினத்திற்கு ஒப்பான வருமானமொன்றை நடைமுறைக்கு சாத்தியமான முறையில் அடைந்துகொள்ள இயலுமை காணப்படவில்லை என்பது. | நீர் மானிகளை பொருத்தி கட்டணங்களை அறவிடுவதனை முறைமைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | விவசாயப் பயிர்கள் விற்பனை நிலையத்தில் 05 அறைகளை முற்பணத் தொகைகைள் (Key Money) செலுத்தி தீர்ப்பதற்குள் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக குத்தகைதாரர்களுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் 03 கடைகளிலிருந்து 03 வருடங்களை விட பழமையான முற்பணத் தொகை ரூபா 220,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. உடன்படிக்கையின் பிரகாரம், 04 | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருடங்களுக்காக வருடாந்தம் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | மீளாய்வாண்டின் போது சுமார் 41 மெற்றிக் தொன்கள் அளவான திண்மக் கழிவினை அகற்றுவதற்கு 11 பதவியணி ஊழியர்கள் மற்றும் 03 வாகனங்களுக்காக ரூபா 37,848,367 மாத்திரம் செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த கழிவுகள் சூழலுக்கு இணக்கமபன முறையில் அகற்றப்பட்டிருக்கவில்லை. | திண்மக் கழிவு மீள் சுழற்சி செய்வதற்கான நிலையமொன்று இல்லாதிருந்தமை. | திண்மக் கழிவு முகாமைத்துவ திட்டமொன்று தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 19(xii) ஆம் பிரிவின் பிரகாரம், விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரமின்றி 2022 ஆம் ஆண்டின் போது எரிபொருள் நிரப்பு நிலையமொன்றை நிர்மாணிப்பதற்காக 30 வருட காலத்திற்காக காணியொன்று குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அந்த காணிக்காக மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன், நிலுவை குத்தகை வாடகை ரூபா 41332 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உத்தேச காணியை சபைக்கு சுவீகரிப்பதற்கு உரிய சாட்டுதல் சான்றிதழ் கிடைத்த பின்னர் நிலுவைப் பணம் அறவிடப்படும் என்பது. | காணியின் உரித்தினை பெற்று நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி தகைமைச் சான்றிதழினை பெற்றுக்கொள்ளாது அயகம வணிகக் கட்டிடத்தின் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் அத்திவாரம் மற்றும் தூண்களின் அத்திவாரங்கள் (Column Shaft) மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டுள்ள போது 2022 ஆம் ஆண்டின் போது பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், நிறைவு செய்த பணிகளுக்காக ரூபா 2,018,645 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | காணி தகைமைச் சான்றிதழொன்று கோரப்பட்டுள்ளது. நிர்மாணப் பொருட்களின் விலை அதிகரித்த காரணத்தால் பரஸ்பர இணக்கப்பாட்டின் அடிப்படையில் உடன்படிக்கை முடிவுறுத்தப்பட்டுள்ளது. மேலதிக கட்டணங்கள் பிடிகாசில் அறவிடப்படும். | காணி தகைமைச் சான்றிதழொன்று பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறே, மேலதிக கட்டணங்கள் மீள அறவிடப்பட வேண்டும். |

## 3.4 வாகனப் பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உழவு இயந்திரங்கள் மற்றும் 03 டேலர்களின் உரித்தினை சுவீகரிப்பதற்கு அல்லது மீள கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 06 மோட்டார் வாகன ஒப்படைப்பு பதிவேடுகள் தலைமைச் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளமை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 510,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த கையுழவு இயந்திரமொன்று 2015 ஆம் ஆண்டின் போது பயன்படுத்தப்படாது காணப்பட்டது. | எதிர்காலத்தில் ஓட்டத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | தேவைப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |